# திண்ணை பயிற்சிப்பட்டறை - தேனி

## TNPSC GROUP I, II, IIA, IV - 2023

**19th Batch**

**Test - 11**

Mobile: 93614 82208, 99409 70325 Email id: thinnaimail@gmail.com

## திண்ணை உறுதிமொழி

இரக்கமும் கருணையும் இருகண்களாகட்டும்!
இதழ்கள் இரண்டிலும் புன்னகை மலரட்டும்!
உழைப்பும், உறுதியும் இருதோள்களாகட்டும்!
நேர்மை ஒன்றையே நெஞ்சம் தாங்கட்டும்!
இடதும் வலதும் இணைந்த கரங்களாகட்டும்!
இதயம் என்றும் அன்பால் துடிக்கட்டும்!
தடைகளைத் தாண்டி கால்கள் ஓடட்டும்!
கொட்டும் வியர்வையே மூலதனமாகட்டும்!
சாதி, மதம் பேதம் ஒழிப்போம்!
பதவி பணம் தரும் கர்வம் தவிர்ப்போம்!
லட்சியம் விதைத்து வெற்றியை அடைந்து!
லஞ்சம் தவிர்த்து நெஞ்சை நிமிர்த்து!
அறத்தின் வழிநின்று மனிதம் போற்று!!

1. பின்வருவனவற்றுள் இந்திய அரசியலமைப்பின் கூட்டாட்சி முறையின் அம்சங்களில் அல்லாதது எவை?
   1. அதிகாரப் பகிர்வு 2. அவசர காலஏற்பாடுகள் 3. சுதந்திரமான நீதித்துறை 4. அகில இந்திய பணிகள்
   A. 1, 2 மற்றும் 4 B. 2 மற்றும் 4 C. 1 மற்றும் 3 D. மேற்கண்ட அனைத்தும்
   E. விடை தெரியவில்லை
2. தேசிய அவரசநிலை பிரகடனம் குறித்து தவறான கூற்றை தேர்ந்தெடு:
   A. ஷரத்து 19-ன் கீழ் உத்திரவாதம் அளிக்கப்பட்ட சுதந்திரம் தாமாகவே நிறுத்தப்படுகிறது.
   B. மற்ற அடிப்படை உரிமைகளையும் குடியரசுத் தலைவர் சில குறிப்பிட்ட ஆணைகளைப் பிறப்பிப்பதன் மூலம் தடைசெய்யலாம்.
   C. குடியரசுத் தலைவரால் குற்றங்கள் மற்றும் தண்டனைகளிலிருந்து பாதுகாப்பு பெறும் உரிமையை தடை செய்ய முடியும்.
   D. இந்த ஆணைகள் நாடாளுமன்றத்தால் கட்டாயம் அங்கீகரிக்கப்பட வேண்டும்.
   E. விடை தெரியவில்லை
3. சட்டமன்ற மேலவையின் மொத்த எண்ணிக்கை என்பது ..............
   A. நாற்பது உறுப்பினர்களுக்குக் குறையாமலும், அம்மாநில சட்டமன்ற உறுப்பினர்களின் எண்ணிக்கையில் மூன்றில் ஒரு பங்கிற்கு மிகாமலும் இருத்தல் வேண்டும்.
   B. முப்பது உறுப்பினர்களுக்குக் குறையாமலும், அம்மாநில சட்டமன்ற உறப்பனர்களின் எண்ணிக்கையில் நான்கில் ஒரு பங்கிற்கு மிகாமலும்இருத்தல் வேண்டும்.
   C. இருபது உறுப்பினர்களுக்குக் குறையாமலும், அம்மாநில சட்டமன்ற உறுப்பினர்களின் எண்ணிக்கையில் இரண்டில் ஒரு பங்கற்கு மிகாமலும் இருத்தல் வேண்டும்.
   D. பத்து உறுப்பினர்களுக்குக் குறையாமலும், அம்மாநில சட்டமன்ற உறுப்பினர்களின் எண்ணிக்கையில் ஐந்தில் ஒரு பங்கிற்கு மிகாமலும் இருத்தல் வேண்டும்.
   E. விடை தெரியவில்லை
4. கிராம ஊராட்சியின் ஆய்வாளராக செயல்படுவது யார்?
   A. கிராம நிர்வாக அதிகாரி B. பகுதி உறுப்பினர்கள் C. ஊராட்சி தலைவர்
   D. மாவட்ட ஆட்சியர் E. விடை தெரியவில்லை
5. “இந்தியாவில் இறையாண்மை, ஒற்றுமை மற்றும் ஒருமைப்பாடு ஆகியவற்றை பாதுகாத்து போற்ற வேண்டும்” என்பது எதில் கூறப்பட்டுள்ளது?
   A. முகவுரை B. அடிப்படைக் கடமைகள் C. அடிப்படை உரிமைகள்
   D. அரசு நெறிமுறைக் கோட்பாடுகள் E. விடை தெரியவில்லை
6. பொருத்துக:
   a. பல்வந்த்ராய் மேத்தா - 1. வேரற்ற புற்கள்
   b. அசோக் மேத்தா - 2. 73 மற்றும் 74வது அரசமைப்பு திருத்தச்சட்டங்கள் 1992
   c. ஜி.வி.கே. ராவ் - 3. இரண்டு அடுக்கு பஞ்சாயத்து அமைப்பு
   d. எல்.எம். சிங்வி - 4. மூன்று அடுக்கு பஞ்சாயத்து அமைப்பு
   A. 4 3 2 1 B. 3 4 1 2 C. 4 3 1 2 D. 3 4 2 1 E. விடை தெரியவில்லை
7. பாராளுமன்றத்தின் கூட்டுக் கூட்டம் பற்றிய சரியான கூற்றைத் தேர்ந்தெடு:
   1. கூட்டுக் கூட்டங்கள் மக்களவையின் நடைமுறை விதிகளின் படி நிர்வகிக்கப்படுமே அன்றி மாநிலங்களவை நடைமுறை விதிகளால் அல்ல.
   2. கூட்டுக் கூட்டங்கள் சாதாரண சட்ட முன்வரைவு அல்லது நிதி முன்வரைவிற்கு மட்டுமே பொருந்தும். பண முன்வரைவு அல்லது அரசமைப்பு திருத்தச் சட்ட முன் வரைவிற்கு பொருந்தாது.
   A. 1 மட்டும் B. 2 மட்டும் C. 1 (ம) 2 D. இவற்றில் எதுவுமில்லை
   E. விடை தெரியவில்லை
8. சரியான கூற்றைத் தேர்ந்தெடு:
   1. உலகில் NOTA-வை அறிமுகப்படுத்திய 14 வது நாடு இந்தியா.
   2. ஜனவரி -26 -ம் நாள் தேசிய வாக்காளர் தினம் கொண்டாடப்படுகிறது.

3. தற்போது தேர்தல் ஆணையமானது ஒரு தலைமைத் தேர்தல் ஆணையர் மற்றும் மூன்று தேர்தல் ஆணையர்களைக் கொண்டுள்ளது.

A. 2, 3 மட்டும் B. 1, 3 மட்டும் C. 1 மட்டும் D. 3 மட்டும் E. விடை தெரியவில்லை

9. தேர்தல் சின்னங்கள் ஆணை எந்த ஆண்டு பிறப்பிக்கப்பட்டது?

A. 1952 B. 1968 C. 1972 D. 2018 E. விடை தெரியவில்லை

10. தேசிய பிற்பட்டோர் நல ஆணையத்தின் முதல் தலைவர்?

A. காகா கலேல்கர் B. யுகாந்தர் C. ஜான் மதாய் D. மது தண்டவதே

E. விடை தெரியவில்லை

11. பின்வருபவர்களில் யாருக்கு மக்களவை மற்றும் மாநிலங்களவைத் தேர்தல் இரண்டிலும் வாக்களிக்கும் உரிமை உண்டு?

A. மக்களவையின் தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினர்கள்

B. மாநிலங்களவையின் தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினர்கள்

C. மாநில சட்டமேலவையின் தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினர்கள்

D. மாநில சட்டப்பேரவையின் தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினர்கள்

E. விடை தெரியவில்லை

12. சட்டமன்ற உறுப்பினர்களின் தகுதியின்மை குறித்து தேர்தல் ஆணையத்துடன் கலந்தாலோசித்து முடிவு செய்பவர் யார்?

A. முதலமைச்சர் B. குடியரசுத்தலைவர் C. சபாநாயகர் D. ஆளுநர்

E. விடை தெரியவில்லை

13. பின்வரும் எந்த பிரதமர் மத்திய-மாநில அரசுகளின் உறவினை விசாரிக்க சர்க்காரியா குழுவினை நியமித்தார்?

A. மொரார்ஜி தேசாய் B. சரண் சிங் C. இந்திரா காந்தி D. ராஜீவ் காந்தி

E. விடை தெரியவில்லை

14. மாநில அரசாங்கத்தில் யாரெல்லாம் இடம் பெறுவார்கள்?

1. ஆளுநர் 2. முதலமைச்சர் 3. அமைச்சரவைக்குழு

4. மாநிலத்தின் அரசு வழக்கறிஞர் 5. எதிர்கட்சித் தலைவர்

A. 1, 2 (ம) 4 B. 1, 2 (ம) 5 C. 1, 2 (ம) 3 D. அனைத்தும் E. விடை தெரியவில்லை

15. இந்திய குடியரசுத்தலைவர் அனுபவிக்கும் ஆனால் ஆளுநரால் அனுபவிக்க இயலாத அதிகாரங்களை தேர்ந்தெடு:

1. இராஜதந்திர அதிகாரம் 2. மரண தண்டணையை மன்னிக்கும் அதிகாரம்

3. மாநில சட்டமன்றம் மீதான வீட்டோ அதிகாரம் 4. ராணுவ அதிகாரம்

A. 1 (ம) 4 B. 2 (ம) 3 C. 1, 2 (ம) 3 D. 1, 2 (ம) 4 E. விடை தெரியவில்லை

16. 1986-ஆம் ஆண்டில், "மக்களாட்சி மற்றும் மேம்பாட்டிற்காக பஞ்சாயத்து நிறுவனங்களை புத்துயிர்பிக்க" அமைக்கப்பட்ட குழு எது?

A. அசோக்மேத்தா குழு B. ஜி.வி.கே. ராவ் குழு C. எல்.எம். சிங்வி குழு

D. சந்தானம் குழு E. விடை தெரியவில்லை

17. ஜல்லிக்கட்டு, ஏறுதழுவுதல் விளையாட்டு என்ற தமிழரின் கலாச்சார மற்றும் பண்பாடு இந்திய அரசமைப்பின் ------------- விதியின்படி பாதுகாப்பு அளிக்கப்பட்டுள்ளது.

A. 29(1) B. 39(1) C. 49(1) D. 59(1) E. விடை தெரியவில்லை

18. டெல்லி யூனியன் பிரதேசத்தை, தேசிய தலைநகர் பகுதி என பெயர் மாற்றம் செய்த சட்டத்திருத்தம் எது?

A. 67வது சட்டத்திருத்த சட்டம் B. 68வது சட்டத்திருத்த சட்டம்

C. 69வது சட்டத்திருத்த சட்டம் D. 70வது சட்டத்திருத்த சட்டம்

E. விடை தெரியவில்லை

19. எந்த அரசியலமைப்புச் சட்டத்திருத்தத்தின் மூலமாக இந்திய குடிமக்களின் வாக்களிக்கும் வயதானது 21லிருந்து 18-ஆக குறைக்கப்பட்டது?

A. 61வது திருத்தச்சட்டம் B. 86வது திருத்தச்சட்டம் C. 73வது திருத்தச்சட்டம்

D. 42வது திருத்தச்சட்டம் E. விடை தெரியவில்லை

திண்ணை

திண்ணை பயிற்சிப் பட்டறை, 57A, ஜவகர் மெயின்ரோடு, N.R.T. நகர், தேனி. 99409 70325 Thinnai competitive Exam YouTube Thinnai Theni

20. இந்தியாவில் கூட்டாட்சி முறையை முதன் முதலாக கோரியது எது?
A. மவுண்ட்பேட்டன் திட்டம் B. நேரு அறிக்கை C. அமைச்சரவைக் குழு
D. ராஜாஜி திட்டம் E. விடை தெரியவில்லை

21. கல்கத்தாவில் உள்ள உச்ச நீதிமன்ற நீதிமன்றத்தை அமைக்க கீழ்கண்டவற்றில் எது மன்னருக்கு அதிகாரம் அளித்தது?
A. 1774 சாசனச்சட்டம் B. 1773 ஒழுங்குமுறை சட்டம் C. காரன்வாலிஸ் சட்டத் தொகுப்பு
D. 1726 சாசனச் சட்டம் E. விடை தெரியவில்லை

22. பின்வருவனவற்றில், எது மத்திய - மாநில உறவுகள் தொடர்பான ஆணையம் அல்ல?
A. கோத்தாரி குழு B. சர்க்காரியா குழு C. ராஜமன்னார் குழு
D. புன்சி குழு E. விடை தெரியவில்லை

23. பொருத்துக:
a. முதல் நிர்வாக சீர்திருத்தக் குழு - 1. வீரப்ப மொய்லி
b. இரண்டாவது நிர்வாக சீர்திருத்தக் குழு - 2. மொராஜி தேசாய்
c. மாநில பட்டியலின் கீழ் பாராளுமன்றம் - 3. ஷரத்து 312
d. அகில இந்திய பணிகள் - 4. ஷரத்து 249
A. 1 4 3 2 B. 2 1 4 3 C. 1 2 3 4 D. 4 1 2 3 E. விடை தெரியவில்லை

24. இந்திய அரசமைப்பு சரத்து 21க்கு "சட்டமுறைகளை பின்பற்றி நடத்தல்" விதியை (Due process of Law) தேவை என தீர்ப்பளிக்கப்பட்ட நீதிமன்ற வழக்கு எது?
A. மேனகா காந்தி வழக்கு B. எ.கே. கோபாலன் வழக்கு C. சங்கம் லால் பாண்டே வழக்கு
D. கேசவனந்தா பாரதி வழக்கு E. விடை தெரியவில்லை

25. கூற்று (A) : 73வது சட்டத்திருத்தத்தின் மூலம் உள்ளாட்சி அமைப்புகள் ஏற்படுத்தப்பட்டன.
காரணம் (R) : மக்களாட்சியானது உள்ளாட்சி அரசாங்கங்களின் மூலம் அடித்தட்டு மக்களை சென்றடைந்தது.
A. (A) மற்றும் (R) சரி, (R)-ஆனது (A)-ன் சரியான விளக்கம்.
B. (A) மற்றும் (R) சரி, (R) ஆனது (A)-ன் சரியான விளக்கம் அல்ல
C. (A) சரி ஆனால் (R) தவறு D. (A) தவறு ஆனால் (R) சரி E. விடை தெரியவில்லை

26. மாவட்ட திட்டக்குழு எந்த அரசமைப்பு சட்டத் திருத்தத்தினால் உருவாக்கப்பட்டது?
A. 93வது B. 73வது C. 89வது D. 74வது E. விடை தெரியவில்லை

27. இந்திய அரசியலமைப்பை கூட்டுறவு கூட்டாட்சி என்று கூறியவர் யார்?
A. கிரான்வில் ஆஸ்டின் B. ஜவஹர்லால் நேரு C. K.C. வீர் D. டாக்டர் அம்பேத்கர்
E. விடை தெரியவில்லை

28. பின்வரும் எந்த திருத்தச்சட்டம் தாழ்த்தப்பட்டோர் மற்றும் பழங்குடியினருக்கான தேசிய ஆணையத்தை இரண்டு தனித்தனி அமைப்புகளாக பிரித்தது?
A. 82வது திருத்தச்சட்டம், 2000 B. 89வது திருத்தச்சட்டம், 2003 C. 95வது திருத்தச்சட்டம், 2009
D. 79வது திருத்தச்சட்டம், 1999 E. விடை தெரியவில்லை

29. கீழ்கண்ட அரசியல் அமைப்பின் தன்மைகளை அவை பெறப்பட்ட நாடுகளுடன் பொருத்துக:
a. நாடாளுமன்ற செயல்முறைகள் - 1. அயர்லாந்து
b. குடியரசுத் தலைவர் மீதான பதவிநீக்க தீர்மானம் - 2. ஆஸ்திரேலியா
c. பொதுப்பட்டியலிலுள்ள கருத்துருக்கள் - 3. அமெரிக்கா
d. குடியரசுத்தலைவர் தேர்தல் முறை - 4. இங்கிலாந்து
A. 4 1 2 3 B. 2 3 1 4 C. 4 3 2 1 D. 4 3 1 2 E. விடை தெரியவில்லை

30. பொருத்துக:
a. ஷரத்து 155 - 1. ஆளுநரின் பதவிக்காலம்
b. ஷரத்து 163(1) - 2. மாநிலத்தின் முதல்வர் நியமிக்கப்படுதல்
c. ஷரத்து 164(1) - 3. ஆளுநருக்கு உதவியாகவும் ஆலோசனை வழங்கவும் முதலமைச்சர் தலைமையில் அமைச்சர்கள் குழு
d. ஷரத்து 156 - 4. ஆளுநரின் நியமனம்

திண்ணை

A. 1 2 3 4 B. 4 3 2 1 C. 3 4 1 2 D. 4 3 1 2 E. விடை தெரியவில்லை

31. அரசியல் நிர்ணய சபை உறுப்பினர்கள் எவ்வாறு தேர்ந்தெடுக்கப்பட்டனர்?
1. மாகாண சட்டமன்றங்களின் உறுப்பினர்களே அரசமைப்பு நிர்ணய சபை உறுப்பினர்களை மறைமுக வாக்கெடுப்பின் மூலம் தேர்ந்தெடுத்தனர்
2. மாகாணங்கள், சுதேச அரசுகள் அல்லது அரசுகளின் குழுக்களில் இருந்து அதன் மக்கள் தொகைக்கு ஏற்றபடி பத்து இலட்சத்துக்கு ஒருவர் எனும் விகிதத்தில் உறுப்பினர்கள் ஒதுக்கீடு செய்யப்பட்டனர்.
3. ஒவ்வொரு மாகாணத்திற்கும் மூன்று முதன்மை சமுதாயங்களான இந்து, முஸ்லீம், சீக்கியர் ஆகிய சமுதாயங்களின் மக்கள் தொகை விகிதத்தில் இடம் ஒதுக்கப்பட்டது.

A. 1 (ம) 2 B. 1 (ம) 3 C. 2 (ம) 3 D. மேற்கண்ட அனைத்தும் E. விடை தெரியவில்லை

32. சாதாரண மசோதா பற்றிய சரியான கூற்றைத் தேர்ந்தெடு
1. இதனை மாநில சட்டமன்றத்தின் ஏதேனும் ஒரு அவையில் அறிமுகப்படுத்தலாம்.
2. இது அமைச்சர் அல்லது தனிநபரால் அறிமுகப்படுத்தலாம்.

A. 1 மட்டும் B. 2 மட்டும் C. 1 (ம) 2 D. இவற்றில் எதுவுமில்லை E. விடை தெரியவில்லை

33. பொருத்துக.
a. பெருபாரி யூனியன் வழக்கு - 1. 1973
b. கேசவானந்த பாரதி வழக்கு - 2. 1960
c. LIC இந்தியா வழக்கு - 3. 1995
d. மினர்வா மில்ஸ் வழக்கு - 4. 1980

A. 4 3 2 1 B. 2 1 3 4 C. 3 4 2 1 D. 4 1 3 2 E. விடை தெரியவில்லை

34. ஷரத்து 39A எதனை பற்றி குறிப்பிடுகிறது?
A. குழந்தைகளுக்கு ஆரோக்கியமான வளர்ச்சிக்கான வாய்ப்புகள்
B. சுற்றுச்சூழல் பாதுகாப்பு
C. பின்தங்கிய பிரிவான SC, ST க்களின் கல்வி மற்றும் பொருளாதார நலன்களை மேம்படுத்துதல்
D. சம நீதியை ஊக்குவித்தல் மற்றும் ஏழைகளுக்கு இலவச சட்ட உதவியை வழங்குதல்
E. விடை தெரியவில்லை

35. "கிராம பஞ்சாயத்துக்களை ஒழுங்கமைக்க அரசு நடவடிக்கை எடுப்பதை" பற்றி கூறும் ஷரத்து எது?
A. ஷரத்து 43 B. ஷரத்து 40 C. ஷரத்து 21 D. ஷரத்து 30
E. விடை தெரியவில்லை

36. எந்த சட்டத்திருத்தம் "கூட்டுறவு சங்கங்கள்" தொடர்பான புதிய கொள்கைகளை சேர்த்தது?
A. 42வது சட்டத்திருத்தம் B. 97வது சட்டத்திருத்தம் C. 44வது சட்டத்திருத்தம்
D. 86வது சட்டத்திருத்தம் E. விடை தெரியவில்லை

37. பொருத்துக.
a. 35வது திருத்தம் - 1. கோவா
b. 13வது திருத்தம் - 2. மணிப்பூர் மற்றும் திரிபுரா
c. 27வது திருத்தம் - 3. சிக்கிம்
d. 56வது திருத்தம் - 4. நாகலாந்து

A. 3 4 2 1 B. 2 4 1 3 C. 4 3 1 2 D. 3 4 1 2 E. விடை தெரியவில்லை

38. பொருத்துக.
a. சோவியத் அரசமைப்பு - 1. நாடாளுமன்றத்தின் ஈரவைகளின் கூட்டுக்கூட்டம்
b. ஆஸ்திரேலியா அரசமைப்பு - 2. மாநிலங்களவை உறுப்பினர்கள் தேர்தல்
c. பிரான்சு அரசமைப்பு - 3. சுதந்திரம், சமத்துவம், சகோதரத்துவம்
d. தென் ஆப்பிரிக்கா அரசமைப்பு - 4. அடிப்படை கடமைகள்

A. 1 2 3 4 B. 4 2 3 1 C. 2 3 1 4 D. 4 1 3 2 E. விடை தெரியவில்லை

39. எப்பொழுது நமது அரசமைப்பின் முகவுரையான ஜவஹர்லால் நேருவின் குறிக்கோள் தீர்மானம் அரசியல் நிர்ணய சபையால் ஏற்றுக்கொள்ளப்பட்டது?
A. ஜனவரி 22, 1947 B. நவம்பர் 26, 1949 C. ஜனவரி 22, 1946 D. ஜனவரி 26, 1950
E. விடை தெரியவில்லை

40. பின்வருவனவற்றில் 1976-ம் ஆண்டு 42வது சட்டத்திருத்தத்தின்படி எந்த ஷரத்துகள் சேர்க்கப்பட்டது?
A. ஷரத்து - 39, 39A, 43A, 48A B. ஷரத்து - 39, 38, 37, 36 C. ஷரத்து - 44, 45, 48A, 49
D. ஷரத்து - 40, 43, 43B, 39A E. விடை தெரியவில்லை

41. சரியான கூற்றைத் தேர்ந்தெடு.
1. மாநில தலைமை வழக்கறிஞர் ஐந்து வருடங்கள் வழக்கறிஞாக உயர்நீதிமன்றத்தில் பணியாற்றி இருக்க வேண்டும்.
2. மாநில தலைமை வழக்கறிஞர் ஆளுநர் விரும்பும் வரை பணியில் நீடிக்கலாம்.
A. 1 மட்டும் B. 2 மட்டும் C. 1 (ம) 2 D. இவற்றில் எதுவுமில்லை
E. விடை தெரியவில்லை

42. இந்தியாவின் தலைமை வழக்கறிஞர் பதவி பற்றி கூறும் சரத்து எது?
A. சரத்து 73 B. சரத்து 74 C. சரத்து 77 D. சரத்து 76 E. விடை தெரியவில்லை

43. பண மசோதா தொடர்பான தவறான கூற்றைத் காண்க.
A. இம்முன்வரைவை அமைச்சர் மட்டுமே அறிமுகப்படுத்த முடியும்
B. இது மக்களவையில் மட்டுமே கொண்டு வர முடியும்
C. இம் முன்வரைவை 15 நாட்கள் வரை மட்டுமே மாநிலங்களவையில் வைத்திருக்க முடியும்
D. இது குடியரசுத் தலைவரின் பரிந்துரையின் அடிப்படையில் மட்டுமே அறிமுகப்படுத்தலாம்
E. விடை தெரியவில்லை

44. மக்களவையின் அதிகாரங்கள் பற்றி சரியான கூற்றைத் தேர்ந்தெடு.
1. மாநில பட்டியல் மற்றும் பொதுப்பட்டியலில் உள்ள விடயங்கள் குறித்த சட்டங்களை மக்களவை நிறைவேற்றுகிறது.
2. மக்களவையின் சிறப்பதிகாரம், நிதிநிலை அறிக்கை அல்லது பணம் சம்பந்தப்பட்ட எந்த ஒரு சட்டத்தையும் அது நிறைவேற்றினால் அதை மாநிலங்களவை நிராகரிக்க முடியாது.
3. மக்களவை புதிய சட்டங்களை இயற்றவும் நடைமுறையிலுள்ள சட்டத்தை நீக்கவும் அல்லது அதை திருத்தவும் முடியும்.
A. 1 (ம) 2 B. 2 (ம) 3 C. 1 (ம) 3 D. 1, 2 (ம) 3 E. விடை தெரியவில்லை

45. பின்வருவனவற்றுள் சபாநாயகரின் பங்கு மற்றும் பொறுப்புகள் எவை?
1. மக்களவையின் எதிர்கட்சி தலைவருக்கு அங்கீகாரம் அளிப்பது குறித்து சபாநயகரே முடிவு செய்வார்.
2. ஒரு திருத்தச்சட்டம் முன்மொழிவதற்கு சபாநாயகரின் அனுமதி பெற வேண்டும்.
3. திருத்தச்சட்டம் முன்வரைவை அனுமதிப்பதா, இல்லையா என்பதை சபாநாயகர் தான் தீர்மானிப்பார்.
A. 1 (ம) 2 B. 2 (ம) 3 C. 1 (ம) 3 D. 1, 2 (ம) 3 E. விடை தெரியவில்லை

46. பின்வருவனவற்றில் சரியான கூற்று எது?
1. அமைச்சரவை குழுவின் அமைச்சர்கள் அனைவரும் சட்டமன்ற உறுப்பினர்களாக இருக்க வேண்டும்.
2. அமைச்சரவைக் குழுவின் மொத்த அமைச்சர்களின் எண்ணிக்கை, மாநில சட்டமன்றத்தின் மொத்த உறுப்பினர்களின் எண்ணிக்கையில் பதினைந்து சதவீதத்தை தாண்டக்கூடாது என சட்டப்பிரிவு 163 கூறுகிறது.
3. சட்டப்பிரிவு 164 (1A) ஆளுநருக்கு ஆலோசனை வழங்க அமைச்சரவையை உருவாக்க வழிவகை செய்கிறது.
A. 1 மட்டும் B. 2 (ம) 3 C. 3 மட்டும் D. 1 (ம) 3 E. விடை தெரியவில்லை

47. பாராளுமன்றத்தில் கொண்டு வரப்படும் நம்பிக்கையில்லா தீர்மானம் பற்றிய கீழ்கண்ட கூற்றுகளை ஆராய்க.
1. அரசியலமைப்பில் நம்பிக்கையில்லா தீர்மானம் பற்றி கூறப்படவில்லை.
2. ஒரு நம்பிக்கையில்லா தீர்மானத்திற்கும் அடுத்ததிற்கும் குறைந்தது 6 மாத இடைவெளி வேண்டும்.
3. ஒரு சபையில் நம்பிக்கையில்லாத் தீர்மானம் கொண்டு வர குறைந்தது 100 உறுப்பினர்கள் ஆதரவு தேவை.
மேற்கண்ட கூற்றுகளில் சரியான கூற்றுகள் எவை?
A. 1, 2 சரி B. 1 மட்டும் சரி C. 3 மட்டும் சரி D. 1, 3 சரி E. விடை தெரியவில்லை

48. பிரதமர் பற்றிய சரியான கூற்றைத் தேர்ந்தெடு.
1. இவர் தேசிய வளர்ச்சிக் குழு மற்றும் தேசிய நீர்வளக் குழுவின் தலைவர்.
2. இவர் மத்திய அரசின் முக்கிய செய்தி தொடர்பாளராக உள்ளார்.

3. நாட்டின் அனைத்து நிர்வாக நடவடிக்கைகளும் இவரின் பெயரிலேயெ எடுக்கப்படுகிறது.

A. 1 மட்டும் B. 1 (ம) 2 C. 3 மட்டும் D. மேற்கண்ட அனைத்தும்
E. விடை தெரியவில்லை

49. எந்த அரசமைப்பு சட்டத்திருத்தத்தின் மூலமாக, கட்சி பிளவுறும் சூழலில் கட்சி தாவலின் அடிப்படைகள் பொருந்தாது என திருத்தம் செய்யப்பட்டது?

A. 52வது அரசமைப்பு சட்டத்திருத்தம், 1985 B. 61வது அரசமைப்பு சட்டத்திருத்தம், 1988
C. 42வது அரசமைப்பு சட்டத்திருத்தம், 1976 D. 91வது அரசமைப்பு சட்டத்திருத்தம், 2003
E. விடை தெரியவில்லை

50. 10வது அட்டவணையின் கீழ் எந்தவொரு நபரின் சட்டமன்ற உறுப்பினர் பதவியை ரத்து செய்வதற்கான முடிவை எடுப்பவர் யார்?

A. ஆளுநர் B. முதலமைச்சர் C. சட்டமன்ற சபாநாயகர் D. உயர்நீதிமன்ற தலைமை நீதிபதி
E. விடை தெரியவில்லை

51. A, B, C ன் சராசரி எடை 45 கிலோகிராம். A மற்றும் B யின் சராசரி எடை 40 கிலோகிராம் மற்றும் B மற்றும் C யின் சராசரி எடை 43 கிலோகிராம், B யின் எடை என்ன?

A. 17கி.கி B. 20கி.கி C. 26கி.கி D. 31கி.கி E. விடை தெரியவில்லை

52. ஒரு வணிகர் மொத்த வியாபாரியிடமிருந்து 40 பேனாக்களை 36 பேனாக்களின் குறித்த விலைக்கே வாங்குகிறார். அந்தப் பேனாக்களை அவர் 1% தள்ளுபடி கொடுத்து விற்றால் அவர்க்கு ஏற்படும் இலாப சதவீதம் எவ்வளவு?

A. 10% B. 11% C. 15% D. 20% E. விடை தெரியவில்லை

53. 2497 உடன் எந்த குறைந்தபட்ச எண்ணினைக் கூட்டினால், அந்தக் கூடுதல் 5, 6, 4 மற்றும் 3 ஆல் முழுமையாக வகுபடக்கூடும்

A. 3 B. 13 C. 23 D. 33 E. விடை தெரியவில்லை

54. மீ.சி.ம காண்க. $1\frac{1}{4}$ , $1\frac{2}{3}$ மற்றும் $2\frac{1}{2}$

A. 2 B. 3 C. 4 D. 5 E. விடை தெரியவில்லை

55. இரண்டு எண்கள் கூட்டுத்தொகை 12 மற்றும் பெருக்குத் தொகை 35 எனில், அதனுடைய தலைகீழ் எண்களின் கூட்டுத்தொகை என்ன?

A. $\frac{13}{35}$ B. $\frac{12}{35}$ C. $\frac{14}{35}$ D. $\frac{15}{34}$ E. விடை தெரியவில்லை

56. 48 ஆண்கள் ஒரு வேலையை நாளொன்றுக்கு 7 மணி நேரம் வேலை செய்து 24 நாட்களில் முடிப்பர் எனில், 28 ஆண்கள் அதே வேலையை நாளொன்றுக்கு 8 மணி நேரம் வேலை செய்து எத்தனை நாள்களில் முடிப்பர்?

A. 26 நாட்கள் B. 30 நாட்கள் C. 36 நாட்கள் D. 16 நாட்கள் E. விடை தெரியவில்லை

57. ஒரு தொகையானது தனிவட்டியில் 2 ஆண்டுகளில் ரூ.1008 ஆகவும், 3 ½ ஆண்டுகளில் ரூ.1164 ஆகவும் மாறுகிறது எனில் வட்டி விகிதத்தைக் காண்க.

A. 10% B. 11% C. 12% D. 13% E. விடை தெரியவில்லை

58. A, B ஐ விட 2 மடங்கு வேகமாக வேலை செய்கிறார். B -ஆல் ஒரு வேலையை தனியாக முடிக்க 12 நாட்கள் ஆனால், A மற்றும் B இருவரும் சேர்ந்து அந்த வேலையை முடிக்க தேவைப்படும் நாட்கள்

A. 4 நாட்கள் B. 6 நாட்கள் C. 8 நாட்கள் D. 18 நாட்கள் E. விடை தெரியவில்லை

59. 39 மாணவர்களைக் கொண்ட வகுப்பின் சராசரி 15 வருடங்கள். அவர்களுடன் ஆசிரியரை சேர்க்கும் போது சராசரி 3 மாதம் அதிகரிக்கிறது எனில் ஆசிரியரின் வயது காண்க.

A. 25 வருடங்கள் B. 27 வருடங்கள் C. 26 வருடங்கள் D. 28 வருடங்கள் E. விடை தெரியவில்லை

60. ஒரு நகரத்தில் கல்வியறிவு பெற்றவர்களின் எண்ணிக்கை 5 ஆண்டுகளில் 5 இலட்சத்திலிருந்து 8 இலட்சமாக அதிகரித்தது எனில் அதிகரிப்பின் சதவீதம் என்ன?

A. 80% B. 40% C. 60% D. 20% E. விடை தெரியவில்லை

61. A, B, C, D ஆகியோரிடம் ஒரு தொகை 5 : 2 : 4 : 3 என்ற விகிதத்தில் பகிரப்படுகிறது. C, D ஐ விட ரூ.1000 அதிகம் பெற்றால் B யின் பங்கு என்ன?

A. ரூ.500 B. ரூ.1500 C. ரூ.2000 D. இவற்றில் எதுவுமில்லை E. விடை தெரியவில்லை

62. மோகன் என்பவர் P என்ற இடத்திலிருந்து புறப்பட்டு மேற்கே 2 மீ தூரம் செல்கிறார். பின் வலப்பக்கம் திரும்பி 3 மீ தூரம் சென்று, இடப்பக்கம் திரும்பி 5 மீ தூரம் சென்று, இறுதியாக இடப்பக்கம் திரும்பி 3 மீ தூரம் சென்று Q என்ற இடத்தை அடைந்தார். Q என்ற புள்ளி P புள்ளியில் இருந்து எவ்வளவு தூரத்தில் இருக்கிறது?

A. 2 மீ B. 6 மீ C. 7 மீ D. 8 மீ E. விடை தெரியவில்லை

63. 30 லிட்டர் உள்ள அமிலக் கலவையில், அமிலம் நீரின் விகிதம் 2 : 3. இக்கலவை 2 : 5 என்ற விகிதத்தில் அமிலமும் நீரும் இருக்க சேர்க்க வேண்டிய நீரின் அளவு என்ன?

A. 19 லிட்டர் B. 15 லிட்டர் C. 12 லிட்டர் D. 10 லிட்டர் E. விடை தெரியவில்லை

64. இரு எண்களின் மீ.சி.ம ஆனது மீ.பொ.வ -வின் 6 மடங்காகும். மீ.பொ.வ 12 மற்றும் ஓர் எண் 36 எனில், மற்றோர் எண்ணைக் காண்க.

A. 36 B. 24 C. 48 D. 60 E. விடை தெரியவில்லை

65. ஓர் உள்ளீடற்ற உருளையின் உயரம், உட்புற மற்றும் வெளிப்புற ஆரங்கள் முறையே 9 செ.மீ, 21 செ.மீ மற்றும் 28 செ.மீ ஆகும். உருளையை உருவாக்கத் தேவைப்படும் இரும்பின் கனஅளவைக் காண்க.

A. 9603க.செ.மீ B. 8702க.செ.மீ C. 9700க.செ.மீ D. 9702க.செ.மீ E. விடை தெரியவில்லை

66. A யும் B யும் ஓர் வேலையை 8 நாட்களில் செய்வர். அதே வேலையை B யும் C யும் 12 நாட்களிலும் மற்றும் A யும் B யும், C யும் சேர்ந்து 6 நாட்களிலும் முடிப்பர் எனில் A யும் C யும் சேர்ந்து அவ்வேலையைச் செய்தால் எத்தனை நாட்களில் முடிப்பர்?

A. 4 நாட்கள் B. 8 நாட்கள் C. 6 நாட்கள் D. 12 நாட்கள் E. விடை தெரியவில்லை

67. ஓர் இனிப்புகள் வைக்கும் பெட்டியானது 22 செ.மீ x 18 செ.மீ x 10 செ.மீ என்ற அளவில் உள்ளது. இதனை 1 மீ x 88 செ.மீ x 63 செ.மீ அளவுள்ள ஓர் அட்டைப் பெட்டியில் எத்தனை அடுக்கலாம்?

A. 188 பெட்டிகள் B. 140 பெட்டிகள் C. 163 பெட்டிகள் D. 160 பெட்டிகள்
E. விடை தெரியவில்லை

68. ஒரு பொருளை ரூ.200க்கு வாங்கி 4% நட்டத்திற்கு விற்கப்படுகிறது எனில், அப்பொருளின் அடக்கவிலை என்ன?

A. Rs. 8 B. Rs. 192 C. Rs. 208 D. Rs. 218 E. விடை தெரியவில்லை

69. $a_1, a_2, a_3, \ldots\ldots\ldots\ldots$ என்பன ஒரு கூட்டுத்தொடர் வரிசை எனில், $\frac{a_4}{a_7} = \frac{3}{2}$ எனில் 13வது உறுப்பு

A. $\frac{3}{2}$ B. 0 C. 12 D. 14 E. விடை தெரியவில்லை

70. ஒரு குறிப்பிட்ட அசலுக்கு குறிப்பிட்ட வட்டிவீதத்தில் கிடைக்கும் தனிவட்டி அதன் அசலைப் போல $\frac{1}{9}$ மடங்கு ஆகும். அந்த தொகைக்கு வழங்கப்படும் வட்டிவீதமும், காலமும் சமம் எனில், வட்டி வீதம் என்ன?

A. $3\frac{1}{3}\%$ B. 5% C. $6\frac{2}{3}\%$ D. 10% E. விடை தெரியவில்லை

71. 12 செ.மீ பக்கஅளவு கொண்ட கனசதுரத்தின் பக்கப்பரப்பு

A. 144 செ.மீ$^2$ B. 196 செ.மீ$^2$ C. 576 செ.மீ$^2$ D. 664 செ.மீ$^2$ E. விடை தெரியவில்லை

72. ஓர் அரைக்கோளத்தின் கனஅளவு 1152 $\pi$ க.செ.மீ எனில், அதன் வளைபரப்பு காண்க.

A. $288\pi$ செ.மீ$^2$ B. $144\pi$ செ.மீ$^2$ C. $72\pi$ செ.மீ$^2$ D. $576\pi$ செ.மீ$^2$ E. விடை தெரியவில்லை

73. ராமனின் வருமானத்தில் 50% குறைக்கப்பட்டு பின் 50% அதிகரிக்கப்படுகிறது எனில் அவரின் வருமானம் எவ்வளவு சதவீதம் குறையும்?

A. 12½% B. 25% C. 40% D. 37½% E. விடை தெரியவில்லை

74. $\left(\frac{5}{7}\ of\ 1\frac{6}{13}\right) \div \left(2\frac{5}{7} \div 3\frac{1}{4}\right)$ ன் மதிப்பு?

A. $\frac{20}{169}$ B. 1 C. $\frac{5}{4}$ D. $1\frac{119}{180}$ E. விடை தெரியவில்லை

75. முதல் அடுத்தடுத்து 5 ஒற்றை எண்களின் சராசரி 61, மிகப்பெரிய மற்றும் மிகச்சிறிய எண்களின் வித்தியாசம் என்ன?

A. 2 B. 5 C. 8 D. இவற்றில் எதுவுமில்லை E. விடை தெரியவில்லை

திண்ணை

திண்ணை பயிற்சிப் பட்டறை, 57A, ஜவகர் மெயின்ரோடு, N.R.T. நகர், தேனி. 99409 70325 Thinnai competitive Exam YouTube Thinnai Theni

**19th Batch Test - 11 Answer Key**

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 | 5 | 6 | 7 | 8 | 9 | 10 |
| **B** | **C** | **A** | **D** | **B** | **C** | **C** | **C** | **B** | **A** |
| 11 | 12 | 13 | 14 | 15 | 16 | 17 | 18 | 19 | 20 |
| **D** | **D** | **C** | **C** | **D** | **C** | **A** | **C** | **A** | **B** |
| 21 | 22 | 23 | 24 | 25 | 26 | 27 | 28 | 29 | 30 |
| **B** | **A** | **B** | **A** | **A** | **D** | **A** | **B** | **C** | **B** |
| 31 | 32 | 33 | 34 | 35 | 36 | 37 | 38 | 39 | 40 |
| **D** | **C** | **B** | **D** | **B** | **B** | **A** | **D** | **A** | **A** |
| 41 | 42 | 43 | 44 | 45 | 46 | 47 | 48 | 49 | 50 |
| **B** | **D** | **C** | **B** | **D** | **A** | **A** | **B** | **D** | **C** |
| 51 | 52 | 53 | 54 | 55 | 56 | 57 | 58 | 59 | 60 |
| **D** | **A** | **C** | **D** | **B** | **C** | **D** | **A** | **A** | **C** |
| 61 | 62 | 63 | 64 | 65 | 66 | 67 | 68 | 69 | 70 |
| **C** | **C** | **C** | **B** | **D** | **B** | **B** | **C** | **B** | **A** |
| 71 | 72 | 73 | 74 | 75 | | | | | |
| **C** | **A** | **B** | **C** | **C** | | | | | |